# இலங்கை பாடசாலை மாணவர்களுக்கான ஆயுள் காப்புறுதி தொடர்பான தேசிய கட்டுரை போட்டி

***இளைஞர் சிந்தனைகளுக்கு ஊக்கமளிப்போம்.***
***நாளைய எதிர்காலத்தைப் பாதுகாப்போம்.***

**ஆயுள் காப்புறுதியின் மூலம் நிதி அறிவை மேம்படுத்துதல்**

**இணைந்து முன்னெடுக்கும் நிறுவனங்கள்,**

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு (IRCSL)
ஜப்பானின் உலகளாவிய ஆயுள் மற்றும் காப்புறுதி மேம்பாட்டு அறக்கட்டளை (FALIA)
இலங்கை காப்புறுதி சங்கம் (IASL)

## போட்டியைப் பற்றி

ஆயுள் காப்புறுதி தொடர்பான தேசிய கட்டுரைப் போட்டி என்பது, பாடசாலை மாணவர்களிடையே ஆயுள் காப்புறுதியின் முக்கியத்துவத்தையும் நிதித் திட்டமிடலின் அவசியத்தையும் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, நிதி அறிவை மேம்படுத்தும் நோக்கில் நாடு முழுவதும் நடத்தப்படும் ஒரு தேசிய முயற்சியாகும்.

இந்தப் போட்டியின் நோக்கம், மாணவர்கள் நிதிப் பாதுகாப்பு, குடும்பப் பாதுகாப்பு, நீண்டகாலத் திட்டமிடல் மற்றும் பொறுப்பான முடிவெடுத்தல் ஆகியவற்றைப் பற்றி ஆழமாக சிந்திக்க ஊக்குவிப்பதுடன், அவர்களின் எழுத்துத் திறன், பகுப்பாய்வு திறன் மற்றும் தொடர்பாடல் திறன்களை மேம்படுத்துவதாகும்.

இலங்கை முழுவதும் உள்ள பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் இந்த சிறப்புமிக்க தேசிய நிகழ்ச்சியில் பங்கேற்க அன்புடன் அழைக்கப்படுகிறார்கள்.

## Objectives

- பாடசாலை மாணவர்களிடையே நிதி அறிவை மேம்படுத்துதல்
- ஆயுள் காப்புறுதி பற்றிய விழிப்புணர்வையும் புரிதலையும் அதிகரித்தல்
- விமர்சன ரீதியான மற்றும் படைப்பாற்றல் மிக்க சிந்தனையை ஊக்குவித்தல்.
- சிறு வயதிலிருந்தே பொறுப்பான நிதித் திட்டமிடலை ஊக்குவித்தல்
- எதிர்காலத்தில் நிதி பொறுப்புணர்வுடன் செயல்படும் குடிமக்களாக மாணவர்களை உருவாக்க ஊக்குவித்தல்.

## யார் பங்கேற்கலாம்?

இந்தப் போட்டியில் பின்வரும் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் பங்கேற்கலாம்:

**அரசுப் பாடசாலை** | **தனியார் பாடசாலை** | **சர்வதேசப் பாடசாலை**

## வயது பிரிவுகள்

| | |
|---|---|
| **இளையோர் பிரிவு**<br>13–16 வயது | 2010 தை 1 ஆம் திகதி முதல் 2013 மார்கழி 31 வரை பிறந்த மாணவர்கள் (2026 மார்கழி 31 ஆம் திகதியன்று 13-16 வயதுடையவர்கள்)} |
| **மூத்தோர் பிரிவு**<br>17–19 வயது | 2007 தை 1 ஆம் திகதி முதல் 2009 மார்கழி 31 வரை பிறந்த மாணவர்கள் (2026 மார்கழி 31 ஆம் திகதியன்று 17-19 வயதுடையவர்கள்)} |

## மொழிகள்

கட்டுரைகளை பின்வரும் மொழிகளில் எழுதலாம்:

**சிங்களம்** | **தமிழ்** | **ஆங்கிலம்**

**போட்டி நடைபெறும் முறை**

இப்போட்டி 2026 ஆவணி 22 ஆம் திகதியன்று, இலங்கையின் அனைத்து 25 மாவட்டங்களிலும் நிறுவப்பட்டுள்ள நியமிக்கப்பட்ட பரீட்சை நிலையங்களில் நேரடிப் பரீட்சையாக நடாத்தப்படும்.

ஒவ்வொரு பங்கேற்பாளரும் பரீட்சை நாளன்று வழங்கப்படும் மூன்று கட்டுரைத் தலைப்புகளில் இருந்து ஏதேனும் ஒரு தலைப்பைத் தெரிவுசெய்து கட்டுரை ஒன்றை எழுத வேண்டும்.

- **கால அளவு:** 1 மணித்தியாலம் 30 நிமிடங்கள் (அதிகபட்சம்)
- **பங்கேற்பு:** இலவசம்

இக்கட்டுரையானது பின்வருவனவற்றை வெளிப்படுத்துவதாக அமைய வேண்டும்:

- ஆயுள் காப்புறுதிக் கோட்பாடுகள் பற்றிய புரிதல்
- அறிவைப் பயன்படுத்துவதற்கும் பகுப்பாய்வு செய்வதற்கும் உள்ள திறன்
- கருத்துக்களை திறம்படத் தொடர்புபடுத்தும் ஆற்றல்

விண்ணப்பதாரர்கள் தங்களது பரீட்சை திகதி, நேரம் மற்றும் பரீட்சை நிலைய விபரங்களை 2026 ஆவணி இரண்டாவது வாரத்தில், பதிவுசெய்தலின் போது வழங்கிய தொடர்பு விபரங்கள் ஊடாக குறுஞ்செய்தி மற்றும்/அல்லது மின்னஞ்சல் மூலம் பெற்றுக்கொள்வர்.

விண்ணப்பதாரர்கள் தாங்கள் வழங்கிய கைப்பேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி ஆகியவை துல்லியமானவையாகவும் பயன்பாட்டில் உள்ளவையாகவும் இருப்பதை உறுதிசெய்துகொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.



## கட்டுரைத் தலைப்புகள் – தயாராக வேண்டிய பகுதிகள்

ஆயுள் காப்புறுதி தொடர்பான கட்டுரைகளை பின்வரும் தலைப்புகளின் அடிப்படையில் தயாரிக்குமாறு மாணவர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள்:

"ஆயுள் காப்புறுதி என்பது..."

- குடும்ப நிதிப் பாதுகாப்பிற்கான ஒரு கருவி
- நிதிப் பாதுகாப்பை வழங்குவதற்கான ஒரு வழிமுறை
- வருமானத்தை ஈடுசெய்வதற்கான ஒரு பக்கபலம்
- நீண்ட கால சேமிப்பிற்கான ஒரு முறை
- எதிர்காலத் திட்டமிடலுக்கான ஒரு முதலீடு
- இடர் மேலாண்மைக்கான ஒரு தீர்வு
- பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதற்கான ஒரு வழி
- வாழ்க்கை இலக்குகளை அடைவதற்கான ஒரு அடித்தளம்
- எதிர்பாராத நிகழ்வுகளுக்கு எதிரான ஒரு பாதுகாப்பு அரண்
- குடும்ப நலனுக்குப் பங்களிக்கும் ஒரு காரணி

## பதிவு செய்தல்

**பதிவு செய்யும் காலப்பகுதி**
15 ஆடி 2026 – 31 ஆடி

பதிவுசெய்தல் மாணவரின் பெற்றோர் அல்லது சட்டப்பூர்வ பாதுகாவலரால் மட்டுமே பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

### முக்கியமான திகதிகள்

| செயல்பாடு | திகதி |
|---|---|
| பதிவு ஆரம்பம் | 15 ஆடி 2026 |
| பதிவு முடிவு | 31 ஆடி 2026 |
| கட்டுரைப் போட்டி | 22 ஆவணி 2026 |
| மதிப்பீடு செய்தல் | புரட்டாசி 2026 |
| தேசிய விருது வழங்கும் விழா | ஐப்பசி 2026 |

## பதிவு செய்வதற்கு முன்

தயவுசெய்து பின்வரும் விடயங்களை உறுதிப்படுத்தவும்:

- பதிவு செய்வதற்கான வழிமுறைகளை கவனமாக வாசிக்கவும்.
- மாணவரின் பாடசாலை தகவல்கள் தயாராக உள்ளனவா என்பதை உறுதிப்படுத்தவும்.
- பெற்றோரின் தொடர்பு விபரங்களைத் தயாராக வைத்திருக்கவும்.
- விருப்பமான பரீட்சை மாவட்டத்தை கவனமாகத் தேர்ந்தெடுக்கவும்.
- பயன்பாட்டில் உள்ள மின்னஞ்சல் முகவரி மற்றும் கைப்பேசி இலக்கத்தைப் பயன்படுத்தவும்.



## கட்டுரை மதிப்பீட்டு அளவுகோல்கள்

அனைத்துப் பிராந்தியங்களிலும் நியாயமான, வெளிப்படையான மற்றும் நடுநிலையான மதிப்பீட்டு நடைமுறையை உறுதி செய்வதற்காக, அனைத்துக் கட்டுரைகளும் ஒரு சுயாதீன நடுவர் குழுவினால் தரப்படுத்தப்பட்ட மதிப்பீட்டு அளவுகோல்களின்படி மதிப்பீடு செய்யப்படும்.

மதிப்பீடு பின்வருவனவற்றின் அடிப்படையில் அமையும்:

- வழங்கப்பட்ட தலைப்புக்குரிய பொருத்தப்பாடு
- உள்ளடக்கத்தின் தரம் மற்றும் துல்லியம்
- கட்டுரையின் கட்டமைப்பு மற்றும் ஒழுங்கமைப்பு
- விமர்சன சிந்தனை மற்றும் தனித்துவமான தன்மை
- மொழிப் பயன்பாடு மற்றும் வெளிப்பாட்டின் தெளிவு

## விருதுகள் மற்றும் அங்கீகாரம்

🏆 🏆 பணப்பரிசுகளை வென்றிடுங்கள்

அனைத்து விருதுகளும் ஐப்பசி 2026ல் கொழும்பில் நடைபெறும் விருது வழங்கும் விழாவில் வழங்கப்படும்

**தேசிய ரீதியிலான வெற்றியாளர்கள் (இளையோர் மற்றும் மூத்தோர் பிரிவுகள்):**

| 🏆 இடம் | இளையோர் பிரிவு (13–16 வருடங்கள்) | மூத்தோர் பிரிவு (17–19 வருடங்கள்) |
|---|---|---|
| 🥇 முதலாம் இடம் | இ.ரூபா 75,000 | இ.ரூபா 75,000 |
| 🥈 இரண்டாம் இடம் | இ.ரூபா 50,000 | இ.ரூபா 50,000 |
| 🥉 மூன்றாம் இடம் | இ.ரூபா 25,000 | இ.ரூபா 25,000 |

## மாவட்ட சிறப்பு விருதுகள் (அனைத்து 25 மாவட்டங்களும்)

அனைத்து 25 மாவட்டங்களிலிருந்தும் சிறந்த திறமைகளை வெளிப்படுத்துபவர்களுக்கு மாவட்ட சிறப்பு விருதுகள் வழங்கப்படும்.

இளையோர் மற்றும் மூத்தோர் பிரிவுகளின் கீழ் மொத்தமாக 144 மாவட்ட சிறப்பு விருது வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். ஒவ்வொரு மாவட்ட சிறப்பு விருது வெற்றியாளருக்கும் ரூ.5,000/- பணப் பரிசு வழங்கப்படும்.

### சான்றிதழ்கள்

🎓அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் சான்றிதழ்கள்

- தேசிய விருது வெற்றியாளர்களுக்கு அச்சிடப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- மாவட்ட மட்ட சிறப்பு விருது வெற்றியாளர்களுக்கு அச்சிடப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- போட்டியில் பங்கேற்றதை அங்கீகரிக்கும் வகையில் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் உத்தியோகபூர்வ மின்-பங்கேற்புச் சான்றிதழ் வழங்கப்படும்.



## போட்டி விதிகள்

- பதிவுசெய்த ஒவ்வொரு மாணவரும் தமக்குரிய பரீட்சை நிலையத்திற்கு நேரில் சென்று சமூகமளித்தல் வேண்டும்.
- பதிவுசெய்த ஒவ்வொரு மாணவரிடமிருந்தும் ஒரு கட்டுரைச் சமர்ப்பிப்பு மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.
- வெற்றியாளராகத் தெரிவுசெய்யப்படும் பட்சத்தில், அடையாளம், தகுதி மற்றும் பதிவு விபரங்களை சரிபார்ப்பதற்கான ஆதார ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் கோரலாம்.
- விழிப்புணர்வு, கல்வி, அறிக்கை செய்தல் அல்லது பிற வெளியீட்டு நோக்கங்களுக்காக, சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகளைப் பயன்படுத்துவதற்கும் வெளியிடுவதற்கும் ஏற்பாட்டாளர்களுக்கு முழு உரிமை உண்டு.
- போட்டி விதிகள், தகுதி அளவுகோல்கள் அல்லது அறிவுறுத்தல்களுக்கு அமையாத விண்ணப்பங்கள் அல்லது சமர்ப்பிப்புகளை நிராகரிக்கும் உரிமை ஏற்பாட்டாளர்களுக்கு உண்டு.

## தொடர்புகொள்ளல்

**சந்தை அபிவிருத்தி மற்றும் வெளியக உறவுகள் பிரிவு**
இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு

**தொலைபேசி:** 011 2396184-9
**உள் இணைப்பு எண்கள்:** 103/ 115/134
**மின்னஞ்சல்:** mder@ircsl.gov.lk

